அன்புள்ள குடும்பத்தவர்களுக்கு,

மழலையர்  வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களை ஒவ்வொரு மாணவரும் முக்கியமானவர் எனும்  கருத்துக்கணிப்பில் யோர்க் பிராந்திய மாவட்டப்  பாடசாலைச் சபை ஈடுபடுத்தவுள்ளது.  இந்தக் கருத்துக்கணிப்பின் நிர்வாகத்தில் YRDSB க்கு ஆதரவளிக்க CCI ஆராய்ச்சி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இணையமூலமான இந்தக்  கருத்துக்கணிப்பு ஏப்ரல் 24, 2023 முதல் மே 10, 2023 வரைக்கும்  பல மொழிகளில்கிடைக்கும்.

வரைவுக் கருத்துக்கணிப்புகள் குறித்து தங்கள் பின்னூட்டங்களை வழங்க உள்ளக மற்றும் வெளியகப் பங்காளர்களுக்குச் சபை ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கியது. இறுதிக் கருத்துக்கணிப்புகளின் உருவாக்கத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பதற்கு இந்தப் பின்னூட்டங்கள் பயன்படுத்தப்பட்டன. எமக்குத் தங்கள் பின்னூட்டங்களை வழங்க நேரம் ஒதுக்கிய அனைவருக்கும் நன்றி. கருத்துக்கணிப்பின் இறுதிப் பதிப்புககள் சபையின் இணையத்தளத்தில் கிடைக்கின்றன.

**மழலையர் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரையான மாணவர்களின் குடும்பத்தவர்களுக்கான தகவல்கள்**

மழலையர் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் தங்கள் பெற்றோர்(கள்), பாதுகாவலர்(கள்) அல்லது பராமரிப்பாளர்(கள்) ஆகியோருடன் வீட்டிலே கருத்துக்கணிப்பை நிறைவு செய்வார்கள். K -3 வகுப்புகளில் உள்ள மாணவர்களின் குடும்ப**த்தவர்**கள், தங்கள் பிள்ளை கருத்துக்கணிப்பை நிரப்புவதை விரும்பவில்லையென்றால், காகித அழைப்பிதழைப் புறக்கணிக்கலாம், இது விலகலாகக் கருதப்படும்.

கருத்துக்கணிப்பைப் பூர்த்திசெய்வதற்கு அனுசரணைகள் தேவைப்படும் (உதாரணமாக. பெரியளவிலான எழுத்தில்  கருத்துக்கணிப்புப் பிரதி, மொழிபெயர்க்கப்பட்ட காகிதப் பிரதிகள்) மழலையர் வகுப்பு முதல் 3ம் வகுப்பு வரையுள்ள மாணவர்களின் குடும்பத்தவர்கள் அவற்றைக் கோருவதற்கு, CCI ஆய்வினை பெப்ரவரி 27, 2023 க்கும் மார்ச் 10, 2023 க்கும் இடையில் 1-866-450-4907 என்ற தொலைபேசியில் தொடர்புகொள்ள வேண்டும்.

**4 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையான மாணவர்களின் குடும்பத்தவர்களுக்கான தகவல்கள்**

கருத்துக்கணிப்பைப் பூர்த்திசெய்வதற்கான காகித அழைப்பைத் தங்கள் ஆசிரியரிடமிருந்து 4 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் பெறுவார்கள், மேலும் கருத்துக்கணிப்பைப் பூர்த்திசெய்வதற்காக வகுப்பறையில் நேரம் வழங்கப்படும். 4 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களுக்கு தங்கள் பிள்ளை கருத்துக்கணிப்பைப் பெறுவது விருப்பமில்லையெனில் **பெப்ரவரி 27, 2023 க்கும் மார்ச் 10, 2023 க்கும்** இடையில் அதிலிருந்து விலகுவதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும். இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் https://cci-survey.com/YRDSB-ESCS-OPT, அல்லது 1-866-450-4907 என்ற தொலைபேசியில் CCI ஆய்வினை அழைப்பதன் மூலம் குடும்பத்தவர்கள் இதிலிருந்து விலகலாம்.